[සියලු ම හිමිකම් ඇවිරිණි] [முழுப்பதிப்புரிமையுடையது] [All Rights Reserved]

# வலயக் கல்வி அலுவலகம் - சம்மாந்துறை

## தரம் 5 மாணவர்களின் அடைவை மேம்படுத்தும் செயற்றிட்டம்

தரம் 5

## தமிழ்

Mr. ஏ. அஸீஸ் – ஆசிரிய ஆலோசகர் (வலயக் கல்வி அலுவலகம் - சம்மாந்துறை)

செயலட்டை – 01

**01. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.**

i) கிறுமிநாசினி / கிருமிநாசினி
ii) ஆயுள் / ஆயுழ்
iii) கீள்வானம் / கீழ்வானம்
iv) வென்கட்டி / வெண்கட்டி
v) கற்ரவர் / கற்றவர்

**02. அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.**

i) உணவு உண்ட பின் சிறிது நேரம் ................. வது உடம்புக்கு நல்லது. (உலவு / உளவு)
ii) தந்தை தாய் ................. என்பது முழுமொழி ஆகும் (பேன் / பேண்)
iii) அவ்விடத்தில் அள்ள அள்ளத் தண்ணீர் ................. க் கொண்டே இருந்தது. (ஊறி / ஊரி)
iv) சிறுவர்கள் கடற்கரையில் ................. களைப் பொறுக்கி விளையாடினர். (ஊரி / ஊறி)
v) மலை நாட்டில் ................. மூடியிருந்தமையால் கடுங்குளிராக இருந்தது. (பணி / பனி)

**03. கீழுள்ள வாக்கியங்களின் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) உலகப் ...................... (புகல் / புகழ்) பெற்ற ஓவியங்களுள் முதன்மையானது மோனாலிசா ஓவியமாகும்.
ii) ஒவ்வொரு விளையாட்டுக் குழுவினரும் தத்தம் ...................... (சீறுடைகளில் / சீருடைகளில்) நின்றனர்
iii) வானில் ...................... (நட்சத்திரங்கள் / நட்ச்சத்திரங்கள்) மின்னிக் கொண்டிருந்தன.
iv) பரீட்சைப் ...................... (பெறுபேறுகள் / பெருபேறுகள்) துரிதமாக வெளிவருவதற்குக் கணினி துணை புரிகிறது.
v) விளையாட்டு வீரர்கள் ...................... (உறுதிமொளி / உறுதிமொழி) எடுத்துக் கொண்டனர்.

**04. கீழுள்ள வினாக்களின் வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) கண்களில் இருந்து கண்ணீர் ...................... (கசிந்தது / கசிந்தன)
ii) விளையாட்டுக்கள் ...................... (ஆரம்பமாகியது / ஆரம்பமாகின)
iii) ஒலிம்பிக் போட்டிகள் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை ...................... (நடைபெறுகின்றது/ நடைபெறுகின்றன)
iv) அந்த நீர் சுவையும் மணமும் ......................(கொண்டிருந்தது / கொண்டிருந்தன)
v) மூதுரையில் நல்ல ஒழுக்க ...................... (நெறி / நெறிகள்) பல கூறப்படுகின்றன.

05. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

i) மகனின் சாதனையைக் கேள்வியுற்ற தாய் உச்சிக் குளிர்ந்தாள். **உச்சிக்குளிர்தல்** என்பதன் கருத்து ...................... (மிகமகிழ்தல் / இன்பதுன்பம்) என்பதாகும்.

ii) மழை விடாது பெய்தமையால் நீர் கங்குகரையின்றிப் பாய்ந்தோடியது. ...................... **கங்குகரையின்றி** என்பதன் கருத்து (மிக வேகமாக / அளவில்லாதது) என்பதாகும்.

iii) அவர்கள் இருவரும் கீரியும் பாம்பும் போலவே இருப்பார்கள். **கீரியும் பாம்பும்** போல என்ற உவமைத் தொடரின் கருத்து ...................... (இணைபிரியாமல் / பகையுணர்வுடன்) என்பதாகும்

iv) வகுப்பில் முதல் மாணவனாக வரவேண்டும் என்ற குமரனின் ஆசை கைகூடியது. **கைகூடுதல்** என்ற மரபுத் தொடரின் பொருள் ...................... (நிறைவேறுதல் / அறிவு உண்டாதல்) என்பதாகும்.

v) அத்திபூத்தாற்போல் மாமா இன்று வீட்டுக்கு வந்திருக்கிறாரே. **அத்திபூத்தாற்போல** என்ற உவமைத் தொடரின் கருத்து ...................... (மிக அரிதாக / மிக மகிழ்ச்சியாக) என்பதாகும்.

06. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குரிய **தனிச் சொல்லை** எழுதுக.

i) முனிவர் வாழுமிடம் : ...........................................
ii) மற்றவர்களைப் பற்றி அக்கறையில்லாதவன் : ...........................................
iii) ஒருவர்/ஒரு பொருள் தானே தன் கதையைக் கூறுவது : ...........................................
iv) அகர வரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறும் நூல் : ...........................................
v) சிறைத் தண்டனை பெற்றவன் : ...........................................

07. வேறுபட்ட சொல்லின் **கீழ்க் கோடிடுக**.

i) புனிதம், தூய்மை, களங்கம்
ii) ஏர், இரதம், கலப்பை
iii) சினம், கோபம், சாந்தம்
iv) தொன்மை, புராதனம், நவீனம்
v) இன்னல், துன்பம், உவகை

08. பின்வரும் பழமொழிகளைப் **பூர்த்தி** செய்க.

i) உப்பிட்டவரை ................................................................
ii) கடவுளை நம்பினோர் ................................................................
iii) ................................................................ அம்பலம் ஏறாது.
iv) கேள்விச் செவியன் ................................................................
v) பொறுத்தார் ................................................................
vi) ................................................................ பெருந்தரித்திரம்.
vii) தொட்டிற் பழக்கம் ................................................................
viii) போதுமென்ற மனமே ................................................................
ix) ................................................................ சொற்கேளாது
x) சீரைத தேடின் ................................................................

[සියලු ම හිමිකම් ඇවිරිණි] [முழுப்பதிப்புரிமையுடையது] [All Rights Reserved]

தரம் **5**

# வலயக் கல்வி அலுவலகம் - சம்மாந்துறை

**தரம் 5 மாணவர்களின் அடைவை மேம்படுத்தும் செயற்றிட்டம்**

## தமிழ்

Mr. **ஏ. அஸீஸ் – ஆசிரிய ஆலோசகர்** (வலயக் கல்வி அலுவலகம் - சம்மாந்துறை)

**செயலட்டை - 03**

**01. பின்வரும் சொற்கள் குறிக்கும் பாலை எழுதுக.**

i) மாடுகள் : ..........................................

ii) குயில்கள் : ..........................................

iii) சிறுவன் : ..........................................

iv) சகோதரி : ..........................................

v) மக்கள் : ..........................................

**02. பின்வரும் பழமொழிகளின் கருத்தினை எழுதுக.**

i) உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.

..........................................................................................................................................

ii) அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

..........................................................................................................................................

iii) விளையும் பயிரே முளையில் தெரியும்.

..........................................................................................................................................

iv) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

..........................................................................................................................................

v) ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு

..........................................................................................................................................

**03. பழமொழிகளின் உட்பருத்தைத் தெரிவு செய்து தொடுக்குக.**

| | |
|---|---|
| i) இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை | (அ) முன்மாதிரி |
| ii) இக்கரைமாட்டுக்கு அக்கரைப்பச்சை | (ஆ) நற்புகழ் மங்குவதில்லை |
| iii) அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி | (இ) தருமம் செய் |
| iv) எடுக்குறது பிச்சை ஏறுவது பல்லக்கு. | (ஈ) திருப்தியற்ற மனம் |
| v) குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி மங்காது | (உ) வீண் பெருமை |

**04. பின்வரும் சொற்களைப் பன்மைச் சொற்களாக மாற்றி எழுதுக.**

i) மேகம் : ..............................................

ii) பூங்கா : ..............................................

iii) சிரித்தேன் : ..............................................

iv) சொல் : ..............................................

v) முள் : ..............................................

Tamil Study

**05.** சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் **கீழ் கோடிடுக.**

i) இளனி, இளநீர், இளனீர்

ii) கத்திரிக்கோல், கத்தரிக்கோல், கத்தறிக்கோல்

iii) பாவக்காய், பாகட்காய், பாகற்காய்

iv) வெட்கம், வெக்கம், வெட்க்கம்

v) தொழிலாளி, தொளிலாளி, தொலிலாழி

**06.** வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லின் **கீழ்க் போடிடுக.**

i) ஏழைக்கு என்றும் .................................. (இரங்கு / இறங்கு)

ii) இரவில் நன்றாய் .................................. (உரங்கு / உறங்கு)

iii) கறிக்குச் சேர்ப்பது .................................. (புழி / புளி)

iv) வீரத்தின் மறு பெயர் .................................. (மறம் / மரம்)

v) .................................. (சுற்றாடலை / சுற்றாடவை)ச் சுத்தமாக வைத்திருப்போம்.

**07.** பின்வரும் வாக்கியங்களில் வந்துள்ள **இணைமொழிகளை** எழுதுக.

i) விலங்குகள் ஒன்றோடொன்று முட்டிமோதிக் கொண்டன : ..........................................

ii) பாஸ்ட்டர் கல்விகேள்விகளில் சிறந்து விளங்கினார் : ..........................................

iii) பூங்காவில் நாங்கள் ஓடியாடித் திரிந்தோம். : ..........................................

iv) கல்வி ஈடு இணைச் செல்வமாகும் : ..........................................

v) நாம் சுத்தமாக வாழ்ந்தால் நோய் நொடிகள் எம்மை அணுகாது : ..........................................

vi) நோயால் பீடிக்கப்பட்டவன் எழும்புந் தோலுமாகக் காட்சியளித்தான் : ..........................................

vii) பெற்றார் பிள்ளைகளைக் கண்ணுங்கருத்துமாக வளர்த்து வந்தனர். : ..........................................

**08.** தொடக்கத்தில் தரப்பட்ட சொல்லின் **எதிர்க்கருத்துச்** சொல்லைத் தெரிவு செய்து அதன் **கீழ்க் கோடிடுக.**

i) விருப்பம் : ஆசை, நட்பு, கருணை, வெறுப்பு

ii) அண்மை : நன்மை, அருகு, சேய்மை, சமீபம்

iii) கோபம் : சினம், பாவம், சாந்தம், வேகம்

iv) புராதனம் : நவீனம், தொன்மை, அறிவீனம், அதிசயம்

v) சண்டை : சீற்றம், அமளி, கோபம், சமாதானம்

vi) விண் : மண், விசும்பு, உயரம், தூரம்

vii) விரைவு : வேகம், தாமதம், உற்சாகம், தளர்ச்சி

viii) சுறுசுறுப்பு : சோம்பல், முயற்சி, சுகம், வணக்கம்

ix) பிறர் : மாற்றான், பகைவன், சிலர், தமர்

x) நினைவு : மறதி, ஞாபகம், எண்ணம், நினைப்பு



Tamil Study

[සියලු ම හිමිකම් ඇවිරිණි] [முழுப்பதிப்புரிமையுடையது] [All Rights Reserved]

# வலயக் கல்வி அலுவலகம் - சம்மாந்துறை

## தரம் 5 மாணவர்களின் அடைவை மேம்படுத்தும் செயற்றிட்டம்

தரம் 5

## தமிழ்

Mr. ஏ. அஸீஸ் – ஆசிரிய ஆலோசகர் (வலயக் கல்வி அலுவலகம் - சம்மாந்துறை)

## செயலட்டை – 04

**01. தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

i) ஆனைக்கும் அடி ................................ (சருக்கும் / சறுக்கும்)

ii) விடாமுயற்சி ................................ (பலன் / பழன்) தரும்.

iii) சிறுவர்கள் ................................ (கடற்கரையில் / கடற்கறையில்) விளையாடினார்.

iv) சூரியனிடமிருந்து கிடைப்பது ................................ (ஒலி / ஒளி)

v) நாம் நல்ல கருத்துக்களை ................................ (அரிய / அறிய) வேண்டும்.

vi) ................................ (வானம் / வாணம்) மப்பும் மந்தாரமுமாய்க் காணப்பட்டது.

**02. பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.**

i) கிளிகள் கூட்டங் கூட்டமாகப் பறந்தன (................)

ii) உணவுப் பொருட்கள் பழுதடைவதற்குக் காரணமானது நுண்ணுயிர்களே (................)

iii) பூக்கள் மலர்ந்து மணம் பரப்பியது (................)

iv) ஒரு வாரத்தில் அழிப்பான்கள் செய்து முடிக்கப்பட்டது. (................)

v) மண்டபம் சனத்திரளினால் நிரம்பிக் காணப்பட்டன (................)

vi) விருந்துபசாரம் நடந்து முடிந்தது. (................)

vii) சிறுவர்கள் விளையாடி மகிழ, பூங்காக்கள் உதவுகின்றன. (................)

viii) வாசிப்பதால் எமது அறிவு வளர்ச்சியடைகின்றது. (................)

xi) ஒவ்வொரு பாடல்களும் இனிமையாய் இருந்தது. (................)

x) அந்த விளையாட்டின் ஒழுங்குவிதிகள் இடத்துக்கிடம் வேறுபட்டுக் காணப்பட்டது. (................)

**03. பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களில் இருக்கும் சொற்களின் கருத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

i) **உண்மை** பேசுதல் உயர்வு தரும் ................................................

ii) அவர்கள் இருவரும் இணைபிரியாத **நண்பர்கள்** ................................................

iii) இருவரது சம்பளத்திலும் **வேறுபாடு** காணப்பட்டது ................................................

iv) **எசமான்** பதில் எதுவும் கூறப்படவில்லை ................................................

v) கூனி, கைகேயியின் **தூய** மனதை மாற்றினாள் ................................................

vi) தசரதன் புத்திரப் பேற்றை விரும்பி **யாகம்** செய்தான் ................................................

vii) தரசதன், இராமனுக்கு மடிசூட்ட விரும்பினான் ................................................

**04.** தொடக்கத்தில் உள்ள சொல்லின் **ஒத்தகருத்துச்** சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i) மந்திரி : மன்னன், அமைச்சன், புலவன், முதியவன்
ii) ஏர் : கலப்பை, தேர், வயல், விவசாயி
iii) புராதனம் : நவீனம், புதுமை, தொன்மை, புண்ணியம்
iv) சேய்மை : அண்மை, சமீபம், தூரம், தூய்மை
v) காடு : நாடு, பூமி, விருட்சம், வனம்
vi) இன்னல் : இடர், இன்பம், விருப்பம், சண்டை
vii) அழகு : அலங்கோலம், அவலட்சணம், அற்புதம், எழில்
viii) தரணி : ஆரணியம், விண், ஞாலம், மலை
xi) போர் : வெற்றி, தோல்வி, துன்பம், சண்டை
x) கோபம் : சாந்தம், அமைதி, சினம், பாவம்

**05.** ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்ட பாடல் தொடர்பான கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

சின்னக் குருவி பறக்கிறது
சிறகைக் காற்றில் உதைக்கிறது
திண்ணைக் குந்தில் இருக்கின்றேன்
திரும்பிப் பார்த்துச் சிரிக்கிறது

i) குருவி எதனைக் காற்றில் உதைக்கிறது? ..........................................................
ii) இங்கு இடம் பெறும் பெயர் அடைமொழியை எழுதுக ..........................................................
iii) சிரிக்கிறது என்பது எக்காலத்துக்குரிய சொல் ..........................................................
iv) பாடலில் இடம் பெறும் தன்மை ஒருடை வினைமுற்றை எழுதுக. ..........................................................

**06.** பின்வரும் சொற்களை வெற்றிடங்களில் வைத்து எழுதுக.

குளுகுளு, சலசல, படபட, கடகட, கமகம, கலகல

i) பூவின் நறுமணம் ...................................... வென்று வீசியது.
ii) ஆற்று நீர் ...................................... வென்று பாய்ந்தோடியது.
iii) அவர்கள் ...................................... வெனச் சிரித்தார்கள்.
iv) பயத்தினால் என் நெஞ்சம் ...................................... வென அடித்தது.
v) குளிர் காற்று ...................................... வென்று வீசியது.
vi) பானைகள் ...................................... வென்று உருண்டன.

**07.** வெற்றிடங்களுக்குப் பொருத்தமான மரபுச் சொற்களை எழுதுக.

i) குரங்குக்குக் கடுவன் போல மானுக்கு : ..........................................
ii) சிங்கம் கர்ச்சிக்கும் என்பது போல நரி : ..........................................
iii) வாழைக்குக் குட்டி போல பனைக்கு : ..........................................
iv) பசுவுக்குக் கன்று போல மீனுக்கு : ..........................................
v) பலாவுக்குச் சுளை போல மாம்பழத்திற்கு : ..........................................



Tamil Study

[සියලු ම හිමිකම් ඇවිරිණි] [முழுப்பதிப்புரிமையுடையது] [All Rights Reserved]

தரம் **5**

# வலயக் கல்வி அலுவலகம் - சம்மாந்துறை

**தரம் 5 மாணவர்களின் அடைவை மேம்படுத்தும் செயற்றிட்டம்**

## தமிழ்

Mr. **ஏ. அஸீஸ் – ஆசிரிய ஆலோசகர்** (வலயக் கல்வி அலுவலகம் - சம்மாந்துறை)

**செயலட்டை – 05**

**01.** மரபுத் தொடர்களின் கருத்தினை அடைப்பினுள் இருந்து தெரிந்தெடுத்துப் **புள்ளிக் கோட்டில்** எழுதுக.

> பதற்றக்காரன், பிடிவாதம், நித்திரை செய்தல், அறிவு உண்டாதல், ஏமாற்றுதல், மிக மகிழ்தல், பொறாமை, நிறையச் சம்பாதித்தல், குற்றத்தை மறைத்தல், மனம் நோகப் பேசுதல்

i) கண்வளர்தல் :.......................................................................

ii) அள்ளிக்குவித்தல் :.......................................................................

iii) உச்சி குளிர்தல் :.......................................................................

iv) புண்படுத்தல் :.......................................................................

v) கண் திறத்தல் :.......................................................................

vi) வயிற்றெரிச்சல் :.......................................................................

vii) அவசரக் குடுக்கை :.......................................................................

viii) குரங்குப் பிடி :.......................................................................

xi) காது குத்துதல் :.......................................................................

x) பூசி மெழுகுதல் :.......................................................................

**02.** பின்வரும் சொற்களை **பிரித்து** எழுதுக.

i) சிரமமில்லாமல் = ..................................+ ..................................

ii) அழித்தொழித்து = ..................................+ ..................................

iii) நோயின்றி = ..................................+ ..................................

iv) சத்துள்ள = ..................................+ ..................................

v) தங்கக் கூட்டில் = ..................................+ ..................................

vi) பழுதடைவதற்கு = ..................................+ ..................................

**03.** பின்வரும் சொற்களை **சேர்த்து** எழுதுக.

i) வாரி + அனைத்து = ......................................................................

i) முள் + செடி = ......................................................................

i) மண் + குடம் = ......................................................................

i) மலர் + செண்டு = ......................................................................

i) மலை + உச்சி = ......................................................................

Tamil Study

**04. எதிர்பால்** சொற்களை எழுதுக.

i) வீரன் : ..............................................................

ii) குறத்தி : ..............................................................

iii) சீமான் : ..............................................................

iv) மருத்துவன் : ..............................................................

v) புதல்வி : ..............................................................

**05. பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான இணைமொழியைத் தெரிவு செய்து வெற்றிடங்களைப் பூர்த்தி செய்க.**

| |
|---|
| அருமை பெருமை, சுகதுக்கம், ஏழை எளியவர், தடல்புடலாக, பேரும் புகழும், ஆடிப்பாடி |

i) பிறரின் ...................................................... அறிந்து அவற்றில் நாமும் பங்குகொள்வது மனிதத் தன்மையாகும்.

ii) ...................................................... வேலை செய்தால் அலுப்பிருக்காது என்று கூறுவர்.

iii) அவரது ...................................................... உலகெங்கும் பரவியது.

iv) மோகன் ...................................................... களுக்கு வாரி வழங்குவான்.

v) படித்தவரது ...................................................... தனை அறிந்து அவர்களுக்கு மரியாதை செய்தல் வேண்டும்.

vi) விழாவிற்கான ஏற்பாடுகள் ...................................................... நடைபெற்றன.

**06.** பின்வரும் **இணைமொழிகளின்** கருத்தினை எழுதுக.

i) அருமைபெருமை : ..............................................................

ii) சுகதுக்கம் : ..............................................................

iii) அல்லும் பகலும் : ..............................................................

iv) கரடுமுரடு : ..............................................................

v) கல்விகேள்வி : ..............................................................

vi) கண்ணும் கருத்தும் : ..............................................................

vii) சாக்குப்போக்கு : ..............................................................

viii) கள்ளங்கபடம் : ..............................................................

xi) ஏனோதானோ : ..............................................................

x) அறக்கப்பறக்க : ..............................................................

**07. பின்வரும் வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்காளக மாற்றி எழுதுக.**

i) மரம் அசைந்து ஆடியது.

..............................................................................................................................

ii) ஆடு குழைகளைத் தின்றது

..............................................................................................................................

iii) சிறுவன் பாடசாலைக்குச் சென்றான்.

..............................................................................................................................



Tamil Study